தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY 24 MAY 1985 MADRAS-600 009

1987, மார்ச் 5, வியாழக்கிழமை

மாசி 21, அக்ஷய—திருவள்ளுவர் ஆண்டு 2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி.எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின்
நீள்வினையால் நீளும் குடி''

'முயற்சியும், நிறைந்த அறிவும்' என்று சொல்லப்பட்ட இரண்டினையும் உடைய, இடைவிடாத கருமச் செயலால் ஒருவனுடைய குடி உயர்ந்து விளங்கும்.

1. வினாக்கள்-விடைகள்,

உடுக்குறியிட்ட வினாக்கள்.

முக்கிய நிகழ்ச்சிகளுக்கு சர்க்கரை, எண்ணெய் வழங்க பர்மிட் வழங்கல்.

61—(*வினா எண். 4063) திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.—

திருமணம் போன்ற முக்கிய நிகழ்ச்சிகளுக்குச் சர்க்கரை, எண்ணெய் போன்றவை வழங்க பர்மிட் வழங்கும் முறை தற்போது அமுலில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமணம் போன்ற முக்கிய நிகழ்ச்சிகளுக்கு சர்க்கரை வழங்க பர்மிட் வழங்கும் முறை அமுலில் உள்ளது. சமையல் எண்ணெய்க்கு பர்மிட் வழங்குவது இல்லை.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட விஷேச நிகழ்ச்சிகளுக்கு பெர்மிட்மூலம் எவ்வளவு வழங்கப்பட்டிருக்கிறது? அத்தியாவசியத் தேவையான சமையல் எண்ணெய் போன்றவற்றை வழங்க அரசு ஆவண செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமணம் போன்ற முக்கிய நிகழ்ச்சிகளுக்கு இரண்டு மூட்டை சர்க்கரை வழங்கப்பட்டு வருகிறது. பாமாலின்எண்ணெய், சமையல் எண்ணெயைப் பொறுத்தவரையில் நாம் அப்படி வழங்குவதில்லை. அதைப்பொறுத்தவரை, பொது விநியோக முறையிலே மிகவும் சிரமம் இருப்பதால் இது போன்று திருமண நிழ்ச்சிகளுக்கு வழங்குவது இல்லை.

திரு தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொங்கல், தீபாவளி, கிருஸ்துமஸ் போன்ற நிகழ்ச்சிகளுக்குக் கூடுதலாக லெவி சர்க்கரை, சமையல் எண்ணெய் போன்றவற்றை வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வப்போது இருக்கின்ற இருப்பை வைத்து முடிவு செய்யப்படும்.

இலங்கைத் தமிழர்களுக்குப் பொதுமக்களிடமிருந்து நன்கொடை.

62 —(*வினா எண். 8083) திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் திரு.ஆ. நடராசன் மற்றும் திரு.என்.எஸ்.வி.சித்தன்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலங்கைத் தமிழர்கள் நல்வாழ்வுக்காக அரசு பொது மக்களிடமிருந்து நன்கொடையாக வசூலித்த தொகை எவ்வளவு?

(ஆ) அந்தப் பணம் அவர்களுக்காகச் செலவு செய்யப்பட்டதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இலங்கைத் தமிழர்கள் நல்வாழ்வுக்காகப் பொது மக்களிடமிருந்து நன்கொடையாக 31-10-1986 வரை வசூலித்தத் மொத்த தொகை ரூ.5,24,78,830.75

(ஆ) தற்போது முகாம்களில் தங்கியுள்ள அகதிகளின் நலனுக்காக 31-10-1986 வரை ரூ. 40,18,735.35 செலவிடப்பட்டுள்ளது.

திரு எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு சென்ற வருடம் வசூலித்ததையும் முன்பு வசூலித்த தொகையையும் சேர்த்துச் சொல்லியிருக்கின்றார்கள். வசூலித்த தொகை ரூ. 5 கோடிக்கு மேல் இருக்கும்போது செலவு இலட்சக்கணக்கில் என்று சொல்கின்றார்கள். இதை இந்த அரசு எப்படிச் செலவழித்திருக்கின்றது? இந்தத் தொகை எந்த முறையிலே செலவிடப்படுகிறது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தின் முடிவிற்கேற்ப இந்நிதி சேகரிக்கப்பட்டுள்ளது. ஆகவே அனைத்துக் கட்சித்தலைவர்கள் கொண்ட குழுவின் கூட்டத்தினை அமைத்து அதன் முடிவிற்கேற்ப இந்த நிதியை எவ்வாறு செலவிடுவது என்பதைத் தீர்மானம் செய்து அதன்படி செலவிடுவது என்ற குறிப்பை அரசு நடைமுறையில் வைத்துள்ளது.